அட்டாளைச்சேனை பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 13 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 15 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஒக்தோபர் 29 திகதி பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) புறநெகும (நெல்சிப்) திட்டத்தின் கீழ் பிரதேச சபையால் கட்டிடங்கள் மற்றும் வீதிகள் நிர்மாணிப்பதற்காக நான்கு ஒப்பந்தக்காரர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தப்பட்ட தொகையாக பேரேட்டில் ரூபா 76,159,314 கணக்கிடப்பட்ட போதிலும், அவர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகையாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 99,860,690 தொகை காட்டப்பட்டதினால் ரூபா 23,701,376 தொகை அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) பேரேடுகளின் படி மீளாய்வாண்டில் விலங்குகளை அறுப்பது மற்றும் அவற்றின் கழிவுகளை சுத்தம் செய்வது தொடர்பாகப் பெறப்பட்ட வருமானம் ரூபா 3,434,950 தொகையாகக் காட்டப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுகளில் ரூபா 3,499,900 தொகையாகக் காட்டப்பட்டதினால் பெறப்பட்ட வருமானம் ரூபா 64,950 தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) 2005 ஆம் ஆண்டில் காணமால் போன ரூபா 96,392 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் இருப்பு மீதியாகக் காட்டப்பட்டு வருகின்றது.

(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக காரைதீவுப் பிரதேச சபையிடமிருந்து மீளாய்வாண்டின் மே மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை பெறவேண்டிய

கட்டணம் ரூபா 1,038,678 தொகை சொத்துக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 41,650 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்புக்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சின் பிரகாரம் அழிக்கப்பட்ட நூலக புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு ஏடுகளில் செம்மையாக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பிரதேச சபையின் கீழ் இயங்கும் ஐந்து நூல் நிலையங்களுக்கு மீளாய்வாண்டில் ஏசியா பவுண்டேசன் நிறுவனம் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 526 புத்தகங்களின் பெறுமதியாகிய ரூபா 125,426 தொகை சொத்து கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 273,300 தொகையை அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 11 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 350,322 தொகையினை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றில் கொண்டுவரப்படுகிறது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும், மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், நிதி தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு பொறுப்பான குழுக்கள் மீளாய்வாண்டில் செயற்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணம் 571(2)

ரூபா 1,507,537 கூட்டு மொத்தமான வைப்புக்கள் நான்கு ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்தவையாக காணப்பட்ட போதிலும், அவற்றை செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றம் செய்வதற்கு 2015 செப்டம்பர் 11 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்.

சமரப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 6,249,699 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 8,360,916 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,111,217 பின்னடைவைக் காட்டுகின்றது

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், அறவீடு செய்யப்பட்ட வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | அறவீடு செய்யப்பட்ட வருமானம் | அறவீடு செய்யப்படாத வருமானம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக அறவிடப்படாத வருமானம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வீத வரிகள் | 156,000 | 20,965 | 135,035 | 13.4 |
| வாடகைகள் | 1,560,000 | 396,575 | 1,163,425 | 25.4 |
| உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,020,000 | 432,500 | 587,500 | 42.4 |
| சேவைக் கட்டணம் | 8,280,000 | 5,481,221 | 2,798,779 | 66.2 |
| முத்திரை மற்றும் நீதி மன்றக் கட்டணம் | 15,010,000 | 4,907,149 | 10,102,851 | 32.6 |

#### 2.2.2 உத்தரவுப்பத்திரக் கட்டணம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 இன் (vii)(8) மற்றும் (xxx) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் 06 தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 31 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் சபை வருடாந்தம் ரூபா 461,550 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

(ஆ) பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவப்பட்ட 07

தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அறவிடப்படவேண்டிய உரிமைக்கட்டணத்தை 2015 செப்டம்பர் 11 ஆம் திகதி வரை அறவிடத் தவறியதனால் சபை மீளாய்வாண்டில் ரூபா 548,800 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

(இ) பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ள 35 வியாபார நிலையங்கள் மீது அறவிடப்படவேண்டிய உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா 104,200 தொகையை 2015 செப்டம்பர் 11 ஆம் திகதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு
-----------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை
----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு இறுதிவரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு ரூபா 142,459 கூட்டுமொத்தத் தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 11 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபையினால் பிரதான வீதிகளில் பொருத்துவதற்கு ரூபா 1,316,000 தொகைக்கு சோடியம் வகையைச் சேர்ந்த 100 மின்குமிழ்களும் அவற்றுக்கான பொருத்துக்களும் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட போதிலும், 21 மின்குமிழ்கள் மட்டும் செயற்படும் நிலையில் உள்ளதுடன் ஏனைய 79 மின்குமிழ்களும் ஒரு வருடத்திற்கு மேலாக செயலிழந்து காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 11 வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் உள்ளக வீதிகளில் பொருத்துவதற்காக ரூபா 719,900 தொகைக்கு 2,300 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 600 இற்கும் அதிகமான மின்குமிழ்கள் பாவிக்கப்பட்டு உத்தரவாதக் காலத்திற்குள் பழுதடைந்த நிலையில் 06 மாதங்களுக்கு மேலாக களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும், இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒலுவில் தொடக்கம் பாலமுனை வரையான பிரதான வீதியில் சூரிய சக்தியில் (Soloar Power) இயங்கும் 06 மின்குழிழ்கள் ரூபா 510,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு 2014 சனவரி மாதத்தில் பொருத்தப்பட்ட போதிலும், 2014 மார்ச் மாதம் தொடக்கம் செயலிழந்துள்ளதுடன் அதனை கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 14 வரை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்வேறு நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 03 வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதேச சபையினால் 2012 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் கணக்கெடுப்பின் போது 24 வகையைச் சார்ந்த 198 சொத்துக்களின் பற்றாக்குறைகள் சுட்டிக் காட்டப்பட்டபோதிலும் அது தொடர்பாக கணக்காய்வு திகதியான 2014 நவம்பர் 26 வரை முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

(அ) பொதுச் சந்தைக் கட்டிட நிர்மாணம்

------------------------------------------------------------

பொதுச் சந்தை கட்டிட நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு 2015 மே 15 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக 05 கடைகளும் திறந்து வைக்கப்பட்ட போதிலும், அக்கடைத் தொகுதியிலுள்ள 01 கடை மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) அலுவலகக் கட்டிட நிர்மாணம்

---------------------------------------------------

கணக்காய்வுக்கு கிடைக்கப்பட்ட தகவலின்படி இக் கட்டிட நிர்மாணம் தொடர்பாக குறித்த ஒப்பந்தக்காரர் ஒரு வங்கியிடமிருந்து பெற்று சமர்ப்பித்த ரூபா 8,686,787 பெறுமதியான முற்பண முறியும் மற்றும் ரூபா 2,171,700 பெறுமதியான 02 செயற்பாட்டு முறிகளும் அவ்வங்கியினால் வழங்கப்படாத போலியானவை என்பது அறிந்து கொள்ளப்பட்ட போதிலும், சபையானது 2015 செப்டம்பர் 14 ஆம் திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) கொங்கிரீட் வீதி – ஜம்மா பள்ளிவாசல் வீதி

--------------------------------------------------------------------------

ஜும்மா பள்ளிவாசல் வீதிக்கு கொங்கிரீட் இட்டு புனரமைப்பது தொடர்பாக தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் 06 மீ.மீ அளவுள்ள 3,516 கிலோகிராம் கம்பிகள் பயன்படுத்த வேண்டும். எனினும் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட கணியச்சிட்டையின் பிரகாரம் 2,860 கிலோகிராம் கம்பிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளதனால், இவ்வீதி நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மை கேள்விக்குறியாக உள்ளது.

(ஈ) விலங்குகள் அறுக்கும் கொல்களம்

-----------------------------------------------------------

பிரதேச சபையினால் 2005 ஆம் ஆண்டில் ரூபா 680,000 செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு பராமரிக்கப்படும் கொல்களம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(i) தனியாருக்கு சொந்தமான காணியொன்றில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், காணியின் உரிமையை இதுவரையில் சபையின் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொல்களத்தின் சுவர்கள், கதவுகள் மற்றும் யன்னல்கள் என்பன மீளாய்வாண்டில் ரூபா 223,660 தொகைக்கு திருத்தம் செய்யப்பட்டபோதிலும், இவை திருத்தம் செய்து 06 மாத காலத்திற்கு பின்னர் கதவுகள் மற்றும் யன்னல்கள் மீளப்பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

(iii) அறுக்கப்பட்ட விலங்குகளின் தோல்கள் மற்றும் எச்சங்கள் உடன் அகற்றப்படாது பல நாட்கள் தேங்கிக் கிடப்பதால் அவை சுற்றுப்புறத்தில் வாழும் மக்களுக்கு சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இவ் விடயம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பவற்றினால் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டபோதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 14 வரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------------

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமான முகாமைத்துவம்